DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

## அமர்வு வழக்கு எண். 268/2022

**அ.சா.– 6**

| | |
|---|---|
| பெயர் : திரு. ரவிகுமார் | கிராமம்: |
| த/பெ. : திரு. அங்கமுத்து | தாலூக்கா : |
| வயது : | ஜாதி : |
| தொழில்: | மதம் : |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 29th day of February, 2024.

( எதிரிகள்1, 2 ஆஜர் )

**முதல்விசாரணை:–**

நான் அம்மாபேட்டை, மார்க்கெட் தெருவில் குடியிருக்கிறேன். லோடுமேன் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்திற்கு மறுநாள் என்னை போலீசார் விசாரித்தனர். (சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**குறுக்குவிசாரணை(அரசு தரப்பில்):–**

போலீசார் விசாரணையில் 02.08.2021ம் தேதி இரவு 9.30 மணியளவில் நான் என்வீட்டின் மொட்டை மாடியில் இருந்தபொழுது, அருகிலுள்ள பிரபு வீட்டின் மொட்டை மாடியில் 1வது எதிரி ஷாலினி சுமார் 25 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் நபருடன் பேசிக்கொண்டிருந்தார் என்றும், நான் ஷாலினியிடம் அவர் யார் என்று கேட்டபொழுது தனக்கு சொந்தக்காரர் என்றும், நாமக்கல்லில் இருந்து வந்திருப்பதாக சொன்னார் என்றும், பின்பு 04.08.2021ம் தேதி நான் இநத வழக்கு சம்மந்தமாக கேள்விப்பட்டு காவல்நிலையத்திற்கு சென்றபொழுது 02.08.2021ம் தேதி 1வது எதிரியுடன் பேசிக்கொண்டிருந்தவர் 2வது எதிரி அப்பு (எ) காமராஜ் என்று தெரிந்து

அடையாளம் காட்டினேன் என்றும் தற்பொழுது எதிரிகளை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை(எதிரிகள் தரப்பில்)**:- இல்லை.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 268/2022**

**அ.சா.– 7**

| | |
|---|---|
| பெயர் : திரு. தங்கமணி | கிராமம்: |
| த/பெ. : திரு. மாரிமுத்து | தாலூக்கா : |
| வயது : | ஜாதி : |
| தொழில்: | மதம் : |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 29th day of February, 2024.

( எதிரிகள்1, 2 ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் அம்மாபேட்டை, 2ம் நெம்பர் மார்க்கெட்டில் குடியிருக்கிறேன். சங்ககிரியில் ஒரு டீக்கடையில் டீ மாஸ்டராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் விசாரித்தனர்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**குறுக்குவிசாரணை(அரசு தரப்பில்)**:–

போலீஸ் விசாரணையில் 02.08.2021ம் தேதி அதிகாலை 1.30 மணியளவில் நான் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு திரும்பியபொழுது, மார்க்கெட் தெருவில் முக்கு ரோட்டில் சுமார் 25 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும்படி வேகமாக சென்றார் என்றும், மறுநாள் தொலைக்கட்சியில் பார்த்தபொழுது அவர் 2 வது எதிரி காமராஜ் என்பது தெரியவந்தது என்றும், அக்கம் பக்கம் விசாரித்தபொழுது 1 மற்றும் 2 எதிரிகளுக்கிடையே காதல் தொடர்பு இருந்தது தெரியவந்தது என்றும், 04.08.2021ம் தேதி காவல்நிலையத்திற்கு சென்று 2 வது எதிரியை அடையாளம் காட்டினேன்

என்றும் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிகளை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை(எதிரிகள் தரப்பில்)**:- இல்லை.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.